முரசொலி பாசறை
சென்னை 18.06.2023

# கலைஞரும் நானும்

23

**“அதிகாரம் யாரிடம் இருக்கிறது என்பதைப் பொறுத்துத்தான், நாட்டின் முன்னேற்றம் இருக்கிறது. கலைஞரிடம் இருந்த அதிகாரம், கடைசிவரை ஏழை எளிய மக்களுக்கு எதையாவது செய்துவிட முடியாதா என்று யோசித்துக்கொண்டே இருந்தது. அதற்கு நானும் சாட்சி" என கலைஞருடனான தனது நினைவுகளைப் பகிர்கிறார் நாடாளுமன்ற உறுப்பினரும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் பொதுச் செயலாளருமான துவ.ரவிக்குமார்.**

## ‘செய்யத் தகுந்ததைச் செய்யமாட்டோமா..?’

■ து. ரவிக்குமார்,
நாடாளுமன்ற உறுப்பினர்



“கலைஞரின் எழுத்தையும் பேச்சையும் எதிர்கொள்ளாமல் அரசியல் ஆர்வத்தை வளர்த்துக்கொள்ள முடியாது. அந்த வகையில், நான் சிறுவனாக இருந்த காலம்தொட்டே கலைஞரை அறிவேன். எனது தந்தை திராவிடர் இயக்கச் சிந்தனை கொண்டவர் என்பதால், சிதம்பரம், சீர்காழி என கலைஞரின் பொதுக் கூட்டங்கள் நடந்தால், தவறாமல் சென்றுவிடுவோம்.

வெளியூர் கூட்டங்களின் உரை, அடுத்த நாள் **‘முரசொலி’**யில் வந்துவிடும். அதையும் எனது தந்தை வாசிப்பார். அப்படியான பின்னணியில் இருந்துதான் நான் படிக்கச் சென்றேன். படிக்கச் சென்ற இடம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம். அது திராவிட இயக்கத் தலைவர்கள் கொள்கைக் களமாடிய இடம். அதன் தாக்கம் நாங்கள் படித்த காலத்திலும் இருந்தது.

பல்கலைக்கழக மாணவர் தலைவராக, தற்போதைய உயர்கல்வித்துறை அமைச்சர் பொன்முடி அவர்கள் இருந்தார். எங்களுக்கு சீனியர் மாணவர் அவர். அதனால் கழகத்தின் செயல்பாடுகள் கண்களைவிட்டு அகன்றதில்லை. கலைஞரின் உரையையும் எழுத்துகளையும் நானும் கவனிக்கத் தவறியதில்லை.

### முத்தமிழறிஞர் முன் முதல்பேச்சு!

எனக்கு முதன்முதலில் கலைஞருடன் சந்திப்பு அமைந்தது 2006- ஆம் ஆண்டு நான் சட்டமன்ற உறுப்பினராக ஆனபின்புதான். அப்போது அ.தி.மு.க. கூட்டணியில் இருந்து தேர்வாகி இருந்தேன். சட்டமன்றத்தில் பதவி ஏற்பு முடிந்ததும், கலைஞரைச் சந்தித்து வாழ்த்து வாங்க வேண்டும் என விரும்பினேன். அண்ணன் பொன்முடி அவர்கள் அழைத்துச் சென்றார். என்னை வரவேற்று வாழ்த்திய கலைஞர், ‘என்னை சந்திப்பதால், சிக்கல் ஏதாவது வந்துவிடப் போகிறது’ என்றார். அந்தத் தருணம் எனக்கு நெகிழ்ச்சியாக இருந்தது.

எனது முதல் உரையில் அவரின் கவனத்தை ஈர்ப்பதற்காக அதுவரை கவனம் பெறாத பல கோரிக்கைகளை முன்வைத்தேன். “நூலகங்களுக்கான புத்தக எண்ணிக்கை’, ‘தாட்கோ கடன் தள்ளுபடி’, ‘மைசூர் நூலகக் கல்வெட்டு இடமாற்றம்’ என பல கோரிக்கைகளை வைத்தேன். அதில் ஏதாவது ஒன்றாவது ஏற்கப்பட வேண்டும் என எதிர்பார்ப்பாக இருந்தது. அதுபோலவே கலைஞர் தனது பதிலுரையில், நூலகங்களுக்கான புத்தக எண்ணிக்கையை உயர்த்துவது குறித்து அறிவித்தார். அது எனக்கு மகிழ்ச்சியை அளித்தது. கோரிக்கைகளைச் சரியான முறையில் அவரது கவனத்துக்குக் கொண்டு சென்றால், அது செயல்வடிவம் பெறும் என்கிற நம்பிக்கையும் அளித்தது.

தலைவர் கலைஞர் அவர்களிடம் நான் கவனித்து, பெருமை கொண்ட மற்றொரு விஷயம். அண்ணன் பீட்டர் அல்போன்ஸ் போன்ற உறுப்பினர்கள் சிலர் பேசும்போது, அவையில் இருப்பார். அந்த வகையில் எனது உரையையும் கேட்பதற்காகச் சில நேரங்களில் அவையில் இருப்பார். அது எனக்குப் பெருமையாக இருக்கும்.

### செயல் வேகத்தின் தீவிரம்

2006-ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில், தமிழ்நாட்டில் உள்ள அகதிகள் முகாம் குறித்த கட்டுரையை ஒரு வார இதழில் எழுதி இருந்தேன். அந்த இதழ் வெளிவந்த அன்று காலை எனக்கு தொலைபேசி செய்தார். “என்ன ரவிக்குமார், நீங்க எழுதிய விஷயத்தை, அரசிடம் கோரிக்கையாக வைத்து இருக்கலாமே, செய்யத் தகுந்ததைச் செய்ய மாட்டோமா?” எனக் கேட்டார். “அய்யா நீங்க கவனிப்பீங்க, என்றுதான் எழுதினேன், நீங்க மட்டும்தான் அதை செய்து கொடுக்கவும் முடியும்” என கூறினேன்.

உடனே அவர், ‘அப்படியென்றால், அகதிகள் முகாம்களை நேரில் சென்று பார்வையிட்டு, அறிக்கையாக அரசிடம் தரவும்’ என அப்போதே அதற்கான பணியை முடுக்கினார். காலை ஏழு மணிக்கெல்லாம், எனது பெயர் பிரேக்கிங் செய்தியாக தொலைக்காட்சிகளில் வந்துவிட்டது. அதன் பின்னர்தான், அகதிகளுக்கு மாநில அரசினால் செய்யக்கூடிய உதவிகள் ஒவ்வொன்றாகச் சேரத் தொடங்கின. கலைஞரின் அந்தத் தீவிரம்தான், தற்போதைய முதல்வரும் அகதிகள் வாழ்க்கையில் காட்டி வரும் அக்கறை எனலாம்.

விளிம்பு நிலையில் உள்ளவர்கள் குறித்து, எந்தத் தகவலைக் கொண்டு சென்றாலும் கலைஞரிடம் அந்தத் தீவிரத்தைக் காண முடியும். ‘புதிரை வண்ணார்கள்’ குறித்த கோரிக்கையை கலைஞரிடம் கொண்டு சென்றேன். அதற்கு ஒரு குழுவை நியமித்து, நலவாரியம் அமைக்க ஏற்பாடுகள் செய்தார்.

முதுகுத் தண்டுவட அறுவைச் சிகிச்சை பெற்று ஓய்வில் இருந்த நிலையில், மருத்துவமனையில் இருந்து நேரடியாக அவைக்கு வந்து, புதிரை வண்ணார்கள் நல வாரியம் அறிவிப்பினைக் கேட்ட பின்னர், மீண்டும் மருத்துவமனைக்குச் சென்றார். வரலாற்றில் இடம்பெறும் ஒரு முக்கிய அறிவிப்பின்போது, தான் அங்கு இருக்க வேண்டும் என உறுதியாக இருந்தார். இவையெல்லாம்தான் அவரை சிறந்த அரசியல்வாதியாக, அரசியலமைப்பு மாண்பினை உணர்ந்தவராக நிலை நிறுத்துகிறது.

> **சமூகநீதிக் கட்டமைப்பில் தமிழ்நாட்டின் முன்னேற்றம் கலைஞர் இல்லையென்றால், சாத்தியமாகி இருக்காது.**

### புத்தகக் காதலர்

அவையில் இருந்து அவர் வெளியேறும் நேரத்தில், நம்மைத் திரும்பிப் பார்த்தால், நம்மிடம் ஏதோ சொல்ல நினைக்கிறார் என அர்த்தம். அப்படிப் பலமுறை என்னை அழைத்து, செய்திகளைப் பகிர்ந்துள்ளார். 2-ஜி பிரச்சினை வந்த நேரத்தில் கடும் வருத்தத்தில் இருந்தார். அந்த நேரத்தில் அவரைச் சந்திப்பதற்காகச் சென்ற நான், திருவாரூர் கோயில் ஓவியங்கள் குறித்து, ஆங்கிலத்தில் வந்த புத்தகத்தைப் பகிர்ந்து கொண்டேன். “பார்த்துவிட்டு உடனே வந்துவிடவும், நேரம் எடுத்துக்கொள்ள வேண்டாம்” என அண்ணன் சண்முகநாதன் கூறியிருந்தார்.

கலைஞரிடம் ஒரு பழக்கம்... எந்த நூல் வழங்கினாலும் அதை வாய்ப்பிருந்தால் அப்போதே பார்த்துவிடுவார். அல்லது அடுத்த நாள் அதைப் பார்த்துவிட்டு அழைத்துவிடுவார். ஆனால், அன்று நூலினைப் புரட்டியவர், ஆச்சர்யப்பட்டுப் போனார். திருவாரூர் கோயில் தொடர்பாகத் தனது நினைவுகளைப் பகிர்ந்துகொண்டதுடன், இப்படியான நூல்கள் தமிழிலும் கொண்டு வரவேண்டும் என ஆர்வமாகக் கூறினார். அவர் இருந்திருந்தால், அந்த ஆசை நிறைவேறி இருக்கும் எனத் தோன்றுகிறது. அதுபோல, சிதம்பரத்தில் நந்தனாருக்கு சிலை எடுக்க வேண்டும் என்றும் கேட்டிருந்தேன் ‘செய்து விடலாம்’ என்றார். கலைஞரின் நிறைவேறாத ஆசைகளில் அதுவும் ஒன்று.

### கலைஞரிடம் ‘அம்பேத்கர்’ அக்கறை!

தமிழகத்தில் குடிசை வீடுகளே இல்லாத நிலை உருவாக வேண்டும் என்கிற கோரிக்கைக்குச் செவி சாய்த்துத்தான் 2010- ஆம் ஆண்டில் அந்த மாபெரும் திட்டத்தினை கலைஞர் அறிவித்தார். அதில் முதல் வீட்டுக்கான அடிக்கல் நாட்டும் விழாவும், அதற்குப் பின்னர் முதல் வீட்டினை பயனாளிக்கு ஒப்படைக்கும் விழாவும் என் தொகுதியில்தான் நடந்தது. அதற்கு அவர் வருகை தந்து சிறப்பித்தது என் மீது கொண்ட அன்புதான்.

அவரது அரசியல் காலம் முழுவதும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கும், விளிம்பு நிலை மக்களுக்கும் ஏதாவது ஒரு விடியலை வழங்கிக் கொண்டே இருந்தார்.

பாப்பாப்பட்டி, கீரிப்பட்டியில் தேர்தல் நடத்தி முடித்ததும், அத்தோடு விடவில்லை. சென்னையில் அதற்கு விழா எடுத்தார். அதன்மூலம், தனது அரசு எதை உயர்த்திப் பிடிக்கிறது என சமூகத்துக்கு ஒரு செய்தியைச் சொன்னார். அதுதான் கலைஞர். இந்திய ஜனநாயகத்தில் அடித்தட்டு மக்களுக்கும் அதிகாரம் சேர வேண்டும் என செயல்பட்டவர்களில் அண்ணல் அம்பேத்கருக்கு அடுத்து, கலைஞரிடம்தான் அந்த அக்கறை இருந்தது.

சமூகநீதிக் கட்டமைப்பில் தமிழ்நாட்டின் முன்னேற்றம் கலைஞர் இல்லையென்றால், சாத்தியமாகி இருக்காது. அதனால்தான் சொல்கிறேன், அவர் பண்பட்ட அரசியல்வாதி. மேம்பட்ட ஜனநாயகவாதி!"

**...பகிர்வார்கள்**

---

## கலைஞர் நிர்வாகம் - ஒரு சகாப்தம்!



முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சிதான், தமிழ்நாட்டின் முன்னேற்றத்துக்கு அடித்தளம் அமைத்தது என்பது வரலாறு. அந்த வரலாற்றினை ஆண்டு வாரியாகத் தொகுத்து ஆவணமாகத் தந்துள்ள நூல் இது. அவரது அளப்பறியா நிர்வாகத்தின் கீழ், தமிழ்நாட்டில் உருவாக்கப்பட்ட திட்டங்கள், அதன் வரலாறு- விளைவுகள், அந்தத் திட்டம் குறித்து இந்திய அளவிலான ஒப்பீடுகள் எனத் தகவல் திரட்டுகளுடன் சிறந்த ஆவணமாக உருவாக்கியுள்ளார், இந்த நூலின் ஆசிரியர் பிரிட்டோ செபாஸ்டியன்.

கெட்டி அட்டையில், வழவழப்பான தாளில் தரமான நூலாகக் கொண்டு வந்துள்ளனர் அனன்யா பதிப்பகத்தினர். “முத்தமிழறிஞர் கலைஞரை இந்திய அளவிலும், உலக அளவிலும் முறையாக வெளிப்படுத்தும் நூலாக இருக்கிறது” என இந்த நூல் குறித்து, தமிழ்ப் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் ம.இராசேந்திரன் புகழ்ந்துள்ளார். கலைஞர் நூற்றாண்டுக் கொண்டாட்டத்தில் கவனம் பெற வேண்டும் இந்த நூல்.

---

## ப்ளாஷ்பேக்



### வருங்காலத்துக்கான உரையாடல்!

1986-ல், இன்றைய முதலமைச்சர் அவர்கள், மாநில இளைஞர் அணிச் செயலாளராக இருந்தபோது, பொதுக்கூட்டங்கள் மற்றும் கொடியேற்றும் நிகழ்ச்சிகள் ஆகியவற்றில் பங்கேற்க சிவகாசி நகரத்துக்கு வருகைபுரிந்தார். அவர் தங்கி இருந்த பேப்பர் வியாபாரிகள் சங்க திருமண மண்டபத்தில் சந்தித்து, இளைஞர் அணியின் வருங்கால செயல்திட்டங்கள் குறித்து உரையாடினோம். அப்போது நாஞ்சில் சம்பத் அவர்களும் உடனிருந்தார். இளைஞர் அணித் தோழர்களோடு அன்று எடுத்துக்கொண்ட புகைப்படம் இது.



ஜீவா

**-ஜீவா, தலைமைக் கழகப் பேச்சாளர், சிவகாசி.**

இது போன்ற அரிய புகைப் படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

---

## கருவூலம்


### தம்பியின் விருது அண்ணனுக்கு!

**1967 -ஆம் ஆண்டில் அந்த ஆண்டுக்கான சிறந்த வசனகர்த்தா விருதுக்கு கலைஞரைத் தேர்வு செய்தது, தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம். ஏப்ரல் மாதத்தில் விருது வழங்கும் நிகழ்ச்சி, நாவலர் தலைமையில் நடைபெற்றது. முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா விருது வழங்கி கௌரவித்தார். கலைஞரை மேடைக்கு அழைத்தபோது, அவரது விருதினை அவருக்கு அளிக்காமல், ‘நானே விருது பெற்றேன்’ என்பதுபோல அண்ணா தன் கழுத்தில் போட்டுக் கொண்டார். அப்போது அவ்விழா நடைபெற்ற ராஜாஜி அரங்கமே மகிழ்ச்சி ஆரவாரங்களால் அதிர்ந்தது. ‘கலைப்பணியை நேர்த்தியாகச் செய்வதுபோல, ஆட்சிப் பணியையும் என் தம்பி நேர்த்தியாகச் செய்து முன்னேற்றம் கண்டுள்ளார்’ எனப் பாராட்டினார் அண்ணா.**

---

## திராவிடத்தால் வாழ்கிறோம்

152




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131